# உதயன்

சுடர் : 36 கதிர் : 130 | திங்கட்கிழமை | பங்குனி 23 ஆம் நாள் 05 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111




# கோத்தாபய அரசுக்கு 21வரை காலக்கெடு!

## முன்னேற்றம் இல்லாவிடில் வீதிக்கு இறங்குவோம் கொழும்பு பேராயர் கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 5

ஈஸ்டர் தாக்குதலைத் தடுத்து நிறுத்தத் தவறிய பொலிஸ் அதிகாரி ஒருவர், தற்போது மூத்த பொலிஸ் அதிகாரியாக செயற்படுகின்றார். சஹ்ரானுடன் தொடர்பைப் பேணிய அரசியல்வாதிகள் சுதந்திரமாகத் திரிகின்றனர். தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இன்னமும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கான தயக்கம் ஏன்?.

15 ➤

## யாழ். வலய பாடசாலைகளுக்கு மேலும் ஒரு வாரம் விடுமுறை!

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு மேலும் ஒருவாரம் சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் தவணை ஆரம்பிக்கும்போதே யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகள் மீளத் திறக்கப்படும்.

15 ➤

## அதிபர், ஆசிரியருக்கு தொற்று இராமநாதன் கல்லூரிக்கு பூட்டு

யாழ்ப்பாணம், ஏப்.5

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோ

15 ➤

## இந்தியாவுக்கு தப்பியோடிய கொலைச் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் தமிழகத்தின் இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் நடந்த கொலை ஒன்று தொடர்பாகத் தேடப்பட்டு வந்தவர்களாவர். தமிழ்நாடு,

15 ➤

## கொரோனா தொற்றால் இருவர் சாவு

கொழும்பு, ஏப்.5

கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்றிரவு அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பன்சியகமவைச் சேர்ந்த 79 வயதுப்

15 ➤

## வவுனியாவில் 7 பேருக்கு கொரோனா!

வவுனியா, ஏப்.5

வவுனியாவில் நேற்று 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வேப்பங்குளத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கடந்த 24ஆம் திகதி கொரோ

15 ➤

## தொல்பொருள்களைக் காக்க விகாரைகள் அபிவிருத்தியாம்

### வவுனியாவில் கோத்தா உத்தரவு

வவுனியா, ஏப்.5

தொல்பொருள் மரபுரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் போகஸ்வெவ கிராமத்தின் விகாரைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

15 ➤

## மாவட்ட நீதிமன்ற ஊழியருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

யாழ்ப்பாணம், ஏப்.5

வடக்கு மாகாணத்தில் நேற்று 15 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 12 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர்

15 ➤

## காணி சுவீகரிப்பை எதிர்த்து மிருசுவிலில் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், ஏப்.5

தென்மராட்சி, மிருசுவிலில் இன்று காணி சுவீகரிப்புக்காக நில அளவீடு செய்யப்படவுள்ள நிலையில், அதற்கு

15 ➤



## ஆயரின் புகழுடல் இன்று நல்லடக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.5

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் புகழுடல் இன்று இரங்கல் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. ஆயரின் புகழுடல் நேற்று மாலை 3 மணியளவில்

15 ➤

## அரசுக்கு நொந்துவிடும் என்பதற்காக இனப்படுகொலையை மறைக்காதீர்!

### சிவாஜிலிங்கம் கொதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

அரசுக்கு நொந்துவிடும் என்பதற்காக இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை என்று கூறி, உண்மையை மறைக்காதீர்கள். சட்டத்தரணியாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு உண்மை விளங்கவில்லையா? உங்களால்



10 ➤

## வடமராட்சி கடலில் மூழ்கி 24 வயது இளைஞன் சாவு!

யாழ்ப்பாணம், ஏப்.5

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்றில் கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது. கெனடி பிறின்ஸ்ரன் (வயது 24) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைப் படகு மோதி மயிரிழையில் தப்பினர் மீனவர்

## மாதகல் கடலில் பயங்கரம் கண்டும் காணாத கடற்படை

**யாழ்ப்பாணம், ஏப்.5**
**இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாதகலைச் சேர்ந்த இரண்டு மீனவர்களின் படகை இந்திய இழுவைப் படகு மோதியதில், கடலில் வீழ்ந்த மீனவர்கள் இருவர், சுமார் 15 மணிநேரம் உயிருக்காகப் போராடிய சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.**

மீனவர்களைக் காணாது, மாதகல் கரையில் இருந்து மூன்று படகுகளில் சென்ற மீனவர்கள் குறித்த மீனவர்களை மீட்டு கரை திரும்பியுள்ளனர்.

மீனவர்கள் இருவரும் படகு ஒன்றில் இலங்கை கடல் எல்லையில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். இந்திய இழுவைப் படகுகளின் வருகையை அவர்கள் அவதானித்துள்ளனர். இது தொடர்பில் சக மீனவர்களுக்கு தொலைபேசியில் தகவல் வழங்கியுள்ளனர். தகவல் வழங்கி சிறிது நேரத்தில், மீனவர்களது படகு இந்திய இழுவைப் படகால் மோதிச் சாய்க்கப்பட்டுள்ளது. படகில் இருந்து வீழ்ந்த இருவரும், அணியத்தில் பிடித்தபடி சுமார் 15 மணிநேரம் வரை கடலுக்குள் தத்தளித்துள்ளனர். தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் திரும்பி வராததை உணர்ந்த சக மீனவர்கள், நேற்று பகல், மூன்று படகுகளில் கடலில் இறங்கி தேடுதலை முன்னெடுத்தனர். இதன்போது மீனவர்கள் இருவரும் கடலில் தத்தளிப்பதைக் கண்டு அவர்களைக் காப்பாற்றி கரைக்கு அழைத்து வந்தனர்.

இரண்டு மீனவர்களது தொலைபேசி மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் கடலில் தொலைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

"கடற்றொழில் செய்யும் எங்களது உயிருக்கோ அல்லது உடமைகளுக்கோ எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாத நிலையில் நாங்கள் தொழில் செய்து வருகின்றோம். குறித்த சம்பவம் இடம்பெறும்போது இலங்கை கடற்படையினர் அதைப் பார்த்தும் பார்க்காதது போல சென்றனர் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்று அண்மையில் அரசு அறிவித்திருந்த நிலையில் இவ்வாறான சம்பவம், அதுவும் வடக்கு கடலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ப-26,27)

# மரக் கடத்தல் முயற்சி; முறியடித்தது பொலிஸ்



வவுனியா, ஏப்.5
வவுனியா கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுவிளாங்குளம் காட்டுப் பகுதியில் இடம்பெற்ற மரக் கடத்தல் முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

குறித்த காட்டுப்பகுதியில் மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுகின்றன என்று நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸ லால்சில்வாவின் வழிகாட்டலில் கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாறசிங்க பிரேமசிறி தலைமை யிலான பொலிஸார் அங்கு தேடுதலில் ஈடுபட்டனர். இதன்போது பெறுமதியான 50 முதிரை மரக்குற்றிகள் வெட்டப்பட்டு ஏற்றுவதற்கு தயாராகக் காணப்பட்ட நிலையில் அவை மீட்கப்பட்டன. மரங்களை வெட்டிய சந்தேக நபர்களோ வாகனங்களோ அவ் இடத்தில் இல்லாத நிலையில் பொலிஸார் மரக் குற்றிகளை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவந்தனர். பொலிஸாரின் சுற்றிவளைப்பை அறிந்தே சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-110)

# தேசிய வெசாக் நிகழ்வுக்கு நயினாதீவில் கலந்தாய்வு





யாழ்ப்பாணம், ஏப். 5
தேசிய வெசாக் நிகழ்வுகள் தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் ஒன்று நேற்று நயினாதீவு நாகவிகாரையில் நடைபெற்றது.

தேசிய வெசாக் தின நிகழ்வுகள் இம்முறை யாழ்ப்பாணம் நயினாதீவில் நடத்தப்படும் என்று அரசு அறிவித்திருந்தது. அந்த வகையிலேயே அது தொடர்பில் நேற்று நாகவிகாரையில் கலந்துரையாடப்பட்டது. இதில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் உள்ளிட்ட அரச அதிகாரிகள், தேரர்கள் மற்றும் முப்படையினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப)



# சிலிண்டர் வெடித்ததால் சுழிபுரத்தில் பரபரப்பு

சுழிபுரம், ஏப். 5
காஸ் சிலிண்டர் ஒன்று வெடித்ததால் சுழிபுரம் பகுதியில் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.

சுழிபுரம் மத்தி ஐயனார் கோவில் பகுதியில் உள்ள கடை ஒன்றில் இருந்த சிறிய அளவிலான சிலிண்டரே வெடித்துள்ளது. இதனால் சிறிது நேரம் அப்பகுதியில் பதட்டம் நிலவியது. குறித்த கடையின் உரிமையாளர் வேறு பகுதியில் வசித்து வருவதால், தனக்கு உணவு சமைப்பதற்காக, காஸ் சிலிண்டர் ஒன்றைக் கொள்வனவு செய்து, கடையில் வைத்திருந்தார். அந்தக் காஸ் சிலிண்டரே நேற்று வெடித்துள்ளது. எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ப-27)

# சீனா சைனோஃபார்மால் பறிபோனது 7 பேரின் பதவி

கொழும்பு, ஏப்.5
சீனாவின் சைனோஃபார்ம் கொரோனாத் தடுப்பூசிக்கு உடனடியாக அங்கீகாரம் வழங்காததால் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஏழு உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு நீக்கப்பட்டவர்களில் உலக சுகாதார அமைப்பின் கொரோனாத் தடுப்புச் செயற்பாட்டின் ஆசிய பிராந்தியத்துக்கான பிரதிநிதியான மருத்துவர் பாலித அபாயகோனும் அடங்குகின்றார் என்று கூறப்படுகின்றது.

சைனோஃபார்ம் தடுப்பூசியை மக்களுக்குப் பயன்படுத்துவதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம் இரு மாதங்களுக்கு முன்னர் ஒப்புதல் கோரி விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள் இணைக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. இதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நியமித்த நிபுணர் குழு அந்தத் தகவல்களைக் கோரியிருந்தபோதும், அவை தற்போது வரை சமர்ப்பிக்கப்படவில்லை. தேவையான தரவுகளை ஆராயாமல் ஒப்புதல் வழங்க முடியாது என்பதால், ஒப்புதல் வழங்கும் செயற்பாடு தாமதிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. இந்தப் பின்னணியில் ஆணைக்குழுவின் ஏழு உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (முன்னர் வந்த செய்தி 7 ஆம் பக்கத்தில்) (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் அராஜகத்துக்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் போர்க்கொடி

## தவறிழைக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காமை குறித்து கடும் கண்டனம்



**கொழும்பு, ஏப். 5**

**தவறிழைக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறுவது, பொலிஸ் திணைக்களத்தின் மீது பொது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பாழ்படுத்தும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற பொலிஸ் அதிகாரிகளின் மோசமான நடவடிக்கைகள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது. எந்தவொரு சூழ்நிலையிலும் சட்ட வரையறைகளை மீறி, பொலிஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றும் அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரிகளின் வன்முறை நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்து, பொலிஸ் திணைக்களம் மீது மக்கள் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும் என்றும் குறித்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொலிஸாரின் நட வடிக்கை கள் தொடர்பில் தாம் தொடர்ந்தும் கண்காணித்து வருகிறோம் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஒ.22)

# ரூ.1000 சம்பள அதிகரிப்பு; வழக்கின் தீர்ப்பு இன்று!

## தொழில் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.5

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கும் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது என்று தொழில் ஆணையாளர் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை இதுவரை காலமும் கூட்டு ஒப்பந்தமே தீர்மானித்து வந்தது. தற்போது சம்பள நிர்ணய சபையின் விதிகளுக்கு அமைவாக அவர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கூட்டு ஒப்பந்தத்துடன் தொடர்புடைய தரப்பு அடுத்து வரும் காலத்தில் கூட்டு ஒப்பந்தம் அவசியமில்லை. அதனை ரத்துச் செய்ய வேண்டும் என்று எமக்கு எழுத்துமூலமான கோரிக்கையை விடுத்துள்ளது.

எனினும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு, சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு 30 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. அதன்பின்னர் கூட்டு ஒப்பந்தத்தை ரத்துச்செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்பிரகாரம், தற்போது, தொழில் அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரின் அனுமதி பெறப்பட்டு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான அறிவுறுத்தல்கள் அரச அச்சக கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த வாரத்துக்குள் அந்த அறிவித்தலை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது-என்றார். (ற-இ)

# மலையக தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்கும் அரசு

## இராதாகிருஷ்ணன் கண்டனம்

நுவரெலியா, ஏப்.5

தமிழ்க் கல்வி அமைச்சுக்களை அரசாங்கம் நீக்கியுள்ளமை பெருந்தோட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பெரும் துரோகமாகும் என முன்னணியின் தலைவரும், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான இராதாகிருஷ்ணன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையில் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் தமிழ்மொழி மூல கல்வி மேம்பாட்டுக்காக தமிழ் கல்வி அமைச்சுகள் உருவாக்கப்பட்டிருந்தன. ஆறு மாதங்களுக்கு முன்னர் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு இல்லாது செய்யப்பட்டது. தற்போது ஊவா மாகாணத்தின் தமிழ்க் கல்வி அமைச்சும் பறிக்கப்பட்டுள்ளது.

இது பெருந்தோட்ட மக்களுக்கு செய்யப்படும் அநியாயம். மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம். கல்வி வளர்ச்சியிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# ஓ.எம்.பி.க்கு விரைவில் முடிவு கட்டப்படும்!!!

## அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 5

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்துக்கு அமைவாக இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் (ஓ.எம்.பி.) விரைவில் மூடப் படும் என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தை நீண்ட காலத்துக்கு இயக்க முடியாது. அந்த அலுவலகத்தை விரைவில் மூடுவோம். போர்க் காலத்தில் இடம்பெற்ற காணாமல்போதல்கள் வேறு விதமாக இருந்தன.

நாளை தொடர்பில் மக்கள் நம்பிக்கையற்று இருந்த காலப் பகுதியில் அவை இடம்பெற்றன. இதில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்களும் உண்டு. காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுவது தொடர்பில் எந்த ஆட்சேபனையும் இல்லை- என்றார். (ஒ.இ)

# இந்திய மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதி

# இலங்கை மீனவர்கள் கருத்தையும் உள்வாங்கி தீர்மானம் மேற்கொள்க

யாழ்ப்பாணம், ஏப். 5

இலங்கையின் கடற்பரப்பில் இந்திய மீனவர்களை அனுமதிப்பது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களின் போது வடக்கு மீனவர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கும் நோக்கில் அனுமதி அட்டைகளை வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

எனினும், அவ்வாறான எந்தவொரு திட்டமிடலும் இடம்பெறவில்லை என்றும் இது தவறான செய்தி என்றும் கடற்றொழில் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பில், நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர், விடுவிக்கப்படுகின்றனர். இந்த நிலையில், இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானது. அத்துடன், இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்கள் மீது நடவடிக்கை எடுத்தாலும் அவர்களின் வருகை என்பது ஒரு சகஜமானதாகவே காணப்படுகிறது. அதேவேளை, வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளின் மீனவர்களின் தொழில் முறைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பது முக்கியமானது.

எனவே, அரசு வடக்கில் மீனவர்களின் கருத்துக்களையும் கேட்டுத்தான் எந்தவொரு முடிவுக்கும் வரவேண்டுமே தவிர, அமைச்சர் தான் விரும்பியவாறோ அல்லது அரசு விரும்பியவாறோ முடிவுகளை எடுப்பது ஏற்புடையதல்ல - என்றார். (த-இ)

# அரச கரும மொழியாக சிங்களம் மாத்திரமே!!!

## புதிய அரசமைப்பில் உள்ளடக்குமாறு மூத்த பிக்குகள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 5

புதிய அரசமைப்பில் அரச கரும மொழியாக சிங்களம் மாத்திரமே இருக்கவேண்டும். தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் இரண்டாம் மொழியாகவே இருக்கவேண்டும். இவ்வாறு மூத்த பிக்குகள் சிலர் இணைந்து கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

புதிய அரசமைப்புக்கான வரைவை உருவாக்கும் நிபுணர் குழுவின் அலுவலகம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இயங்கி வருகின்றது. அங்கு நேற்று முன்தினம் தமது யோசனைகளை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பெங்கமுவே நாலக தேரர், சிறி ரோஹண பீடத்தைச் சேர்ந்த மோரே கஸ்ஸப்ப தேரர் மற்றும் எல்லே குணவங்ச தேரர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் அதிகாரப் பகிர்வு என்ற பேச்சே இருக்கக் கூடாது. ஒற்றையாட்சியின் அம்சங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். உள்ளூராட்சி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவையே நாட்டின் பிரதான தேர்தல்களாக இருக்கவேண்டும். அத்துடன் நாட்டின் பெயர் தனிச் சிங்கள இனத்தைக் குறிப்பதாக இருக்கவேண்டும் என்ற யோசனைகளை முன்வைத்துள்ளோம், என்றனர். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையல் தோண்ட முயற்சி; வவுனியாவில் 11 பேர் கைது

வவுனியா, ஏப்.5
வவுனியா தாலிக்குளம் பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்த குற்றச்சாட்டில் 11 பேர் பூவரசங்குளம் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.
தாலிக்குளம் முத்துமாரி அம்மன் கோயில் வளாகத்தில் புதையல் தோண்டப்படுகிறது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார், பிக்குமார் இருவர் உட்பட 11 பேரைக் கைதுசெய்தனர்.
அவர்கள் நிலத்தைத் தோண்டப் பயன்படுத்திய உபகரணங்களும் இதன்போது மீட்கப்பட்டன.
இவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-110)





## எல்லைக் கிராமங்களில் சூறையாடப்படும் வளங்கள்

### அமைச்சர் சரத் வீரசேகரவிடம் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஏப்.5
முல்லைத்தீவு துணுக்காய் எல்லைக் கிராமங்களின் இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகரவிடம் துணுக்காய் பிரதேச சபை தவிசாளர் அ.அமிர் தலிங்கம் முறையிட்டுள்ளார்.
ஐயன்கன் குளம் கிராமத்தில் நடைபெற்ற பொலிஸ் நிலையத் திறப்பு நிகழ்வின்போது அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். எட்டு கிராம சேவையாளர் பிரிவில் அதிகளவில் காடுகள் காணப்படுகின்றன. காட்டில் உள்ள பெறுமதியான பாலை,முதிரை மரங்கள் என்பவை அழிக்கப்படுவதுடன் மணல் அகழ்வும் அதிகளவில் இடம்பெறுகிறது.
இதனால் கிராமங்களின் வீதிகள் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ளன. 10 கிலோமீற்றர் காப்பெற் வீதி கூட இதனால் சேதமடைந்துள்ளது. இந்த கிராமங்களில் சூறையாடப்படும் வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என அவர் இதன்போது மேலும் தெரிவித்துள்ளார். (வ-19)

## மக்கள் பிரதிநிதிகளைக் காட்டிலும் மகத்தான பணியாற்றினார் ஆயர்

### சபா குகதாஸ் இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.5
'மறைந்த மன்னார் மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் சீருடை தரிக்காத ஆன்மீக உடை தரித்த போராளி' என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார். ஆயரின் மறைவு தொடர்பில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ஈழத் தமிழர் வரலாற்றில் அவரது பணிகள் மகத்தானவை விடுதலைப் போராட்ட காலங்களில் அரசபடைகளால் நடைபெற்ற அட்டூழியங்களைத் துணிச்சலாக வெளி உலகுக்கு ஊடகங்கள் வாயிலாகவும் சர்வதேச அமைப்புக்கள் மூலமாகவும் வெளிப்படுத்தியவர். பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் தன்னால் இயன்ற பணிகளை ஒன்றிணைத்தவர். கொள்கைக்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை விட உறுதியாக உண்மையாக செயலாற்றியவர்- எனத் தெரிவித்துள்ளார். (வ-20)

## சூழல் சட்டங்களை மீறிய 10 பேர் சிக்கினர்

கொழும்பு, ஏப்.5
புதையல் அகழ்வு உள்ளிட்ட சுற்றுச் சூழல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டுகளின் கீழ் 10 சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதன்படி, புதையல் அகழ்வில் ஈடுபட்டமைக்காக புத்தளம் மனவேரிய பகுதியில் இருவரும், வெஹர கொட பகுதியில் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைக்காக நாவுல பகுதியில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேநேரம் காழிப்பு குற்றச்சாட்டுக்காக மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-இ)

## தமிழ் இனத்துக்காக துணிச்சலோடு குரல் கொடுத்தவர் ஜோசப் ஆண்டகை

### ஆறு. திருமுருகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5
மிக இக்கட்டான கால கட்டங்களில் தற்துணிவோடு எம்மினத்துக் காக் குரல்கொடுத்த ஆன்மிகப் பெரியவரை இழந்துவிட்டோம் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார். மன்னார் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பிரிவு குறித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
மன்னார் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் மக்களின் அவலநிலைகளை உலகுக்கு தயங்காது எடுத்துக்கூறியவர். போர்க்காலத்தில் அகதிகளின் கண்ணீரைத் துடைப்பதில் அக்கறை காட்டியவர். ஏனைய மதத்தலைவர்களோடு மிகுந்த நட்போடு பழகியவர். பாரம்பரியமான மரபுகள் என்றும் பாதுகாக்கப்படவேண்டும் என்ற ஆவல் கொண்டவர். தமிழ் இலக்கிய விழாக்களை என்றும் ஊக்குவித்தவர்.
இப்பெரியாரின் பிரிவு குறித்து சைவத்தமிழ் மக்களின் சார்பில் எமது கவலையைத் தெரிவிப்பதோடு, அவர் காட்டிய நேச உணர்வை அனைவரும் பின்பற்ற வேண்டி, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுவோம் -என்றுள்ளது. (வ-இ)

## ஹெரோய்னுடன் இளைஞன் கைது

வவுனியா, ஏப்.5
ஹெரோய்ன் போதைப் பொருளுடன் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் வவுனியா குற்றத் தடுப்பு பிரிவினரால் வவுனியா, பழைய பேருந்து நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசேட நடவடிக்கையில் ஈடுபட்ட போது, சந்தேகத்துக்கு இடமான முறையில் பழைய பேருந்து நிலையத்தில் நடமாடிய இளைஞர் ஒருவரை சோதனையிட்டனர்.
இதன்போது குறித்த இளைஞரிடம் இருந்து 60 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டது எனத் தெரிவித்த பொலிஸார் அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (வ-18)

## பொலிஸ் சார்ஜென்ட் விபத்தில் சாவு

வீதியின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை லொறி மோதியதில், பொலிஸ் சார்ஜென்ட் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இரவு பழைய கெஸ்பேவ வீதியில் உள்ள கட்டிய சந்தியில் இருந்து தெல்கந்த நோக்கி பயணித்த லொறியே மோட்டார் சைக்கிளை மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.
விபத்தில் உயிரிழந்தவர் மருதானை பொலிஸ் நிலையத்தில் பணிபுரிபவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (த-இ)



## விபத்தில் இளைஞன் சாவு

கனரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் களுகொவ்த்தென் கம்பி பாலத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
உயிரிழந்தவர் டயகம முதலாம் பிரிவைச் சேர்ந்த அதிர்ஷ்டநாதன் கோபிநாதன் (வயது 22) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
டயகம பகுதியிலிருந்து கொழும்பை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், எட்டியாந்தோட்டை பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற கனரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-இ)

## அறுவடையின் பின்னர் வைக்கோலை எரிக்காதீர்

### நானாட்டான் பிரதேச செயலாளர் விவசாயிகளிடம் வேண்டுகோள்



மன்னார், ஏப்.5
பெரும்போக அறுவடையின் பின்னர் வைக்கோல்களை எரிக்கவேண்டாம் என்று, விவசாயிகளிடம் நானாட்டான் பிரதேச செயலாளர் சிறிஸ்கந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
மன்னார் மாவட்டத்தில் அறுவடை நிலையில் இருக்கும் பெரும்போக அறுவடையின் வைக்கோல்களை எரிக்க வேண்டாம். ஏனெனில் வைக்கோல்கள் கால்நடைகளின் உணவாகப் பயன்படுவதுடன், நிலத்துக்கு அது நல்லதொரு இயற்கை உரமாகவும் அமைகிறது. வைக்கோல்களை எரிக்கும் பொழுது சுற்றுச்சூழல் மாசடைகிறது. எனவே அறுவடையின் பின்னர் வைக்கோல்களை எரிக்காமல் அவை சமூகத்துக்கு பயன்படும் விதத்தில் பாதுகாக்க வேண்டும் -என்றார். (ந-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பயப்பீதியில் கோத்தா

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் சரி அவரது அரசில் உள்ளவர்களும் சரி அண்மைக்காலமாக ஒரே விடயத்தை திரும்பத் திரும்ப பல்வேறு கோணங்களில் சொல்லி வருகின்றனர். தமது அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பொய்யான பரப்புரைகளை முன்னெடுக்கின்றன என்பதே அவர்களின் பிரதான கோசம்.

வவுனியாவுக்கு வந்திருந்த ஜனாதிபதி கோத்தாபய, வெள்ளைவான் விவகாரத்தை வைத்து கதை புனைந்தமை போன்று காடழிப்பு விவகாரத்தை முன்னிறுத்தி பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறுகின்றார்.

அவர் முக்கியமான இன்னொரு விடயத்தையும் குறிப்பிடுகின்றார். 2014ஆம் ஆண்டு காலப் பகுதியில் 'எதனோல்' பற்றிப் பரப்புரை மேற்கொண்டே அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவைத் தோற்கடித்தனர். இப்போது காடழிப்பு, தேங்காய் எண்ணெய் என்று வேறு ஒரு மார்க்கத்தின் ஊடாக ஆட்சிக் கவிழ்ப்புக்கான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தப் பொய்ப் பரப்புரைகளின் பின்னணியில் சர்வதேச சக்திகள் இருக்கின்றன என்றும், அவையே இதனை திட்டமிட்டு முன்நகர்த்து கின்றன எனவும் கோத்தாபய கூறுகின்றார்.

'சேறடிப்பதற்காகச் சொல்லப்படும் பொய்களையும் உண்மையாக்கும் வலிமை சமூக ஊடகங்களுக்கு இருக்கின்றது. அதைப் பயன்படுத்தி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்கள் பரப்பப்படுகின்றன' என்று ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்தார்.

கோத்தாபய அரசு ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு உதவியது ஈஸ்டர் தாக்குதலும் கொரோனாவும்தான். ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு ஈஸ்டர் தாக்குதல் ஆதாயமானது. அதை வைத்து சிங்கள பௌத்த பேரினவாத உசுப்பேத்தல் ஊடாக 69 லட்சம் வாக்குகளை கோத்தாபயவால் சுருட்டிக் கொள்ள முடிந்தது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக கொரோனாவின் முதலாவது அலையை தனது இரும்புக் கரத்தால் கட்டுப்படுத்தி மக்களுக்கு நிவாரணமும் வழங்கி மக்களை அதிலிருந்து மீட்டமையால் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசு அமைக்க முடிந்தது.

ஆனால் அதன்பின்னர் அதைத் தக்கவைத்துக்கொள்ள கோத்தா அரசால் முடியவில்லை. எந்த ஈஸ்டர் தாக்குதலை முன்னிறுத்தி கோத்தா ஆட்சிப் பீடம் ஏறினாரோ அதை வைத்தே எதிர்க்கட்சிகள் இன்று அவரை பிய்த்து உதறுகின்றன. தாக்குதலின் சூத்திரதாரியை கண்டுபிடிக்க வேண்டும் எனவும், உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஒரு பக்கத்தால் கோத்தாவின் கழுத்தைப் பிடிக்கின்றார்.

இது போதாதென்று, தேங்காய் எண்ணெயில் புற்றுநோய் பதார்த்தம், சீனி இறக்குமதி வரிக் குறைப்பில் மோசடி, காடழிப்பு என்று அடுத்தடுத்து கோத்தா அரசுக்கு எதிராக பல்வேறு பிரச்சினைகள் தினம் ஒன்றாக முளைக்கின்றன. எதை எப்படிச் சமாளிப்பது என்று கோத்தா அரசு திண்டாடுகின்றது.

மாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்கான சூழ்ச்சி கோத்தா அரசால் தற்போது முன்னெடுக்கப்படுவதன் பின்னணியில், இந்தியாவுக்கு 'பெப்பே' காட்டுவது மாத்திரம் நோக்கம் அல்ல. தேர்தல் நடத்தி பின்னடைவைச் சந்தித்தால் எதிர்காலத்துக்கே ஆப்பாகிவிடும் என்பதால்தான் அதனை ஒத்திவைக்கத் திட்டம் போடுகின்றார்கள்.


களச்சூழல் கோத்தா அரசுக்கு சாதகமாக இல்லை. மறுபுறத்தில் ஆளும் கட்சிக்குள் எக்கச்சக்க பிடுங்குப்பாடுகள். பசில் ராஜபக்சவை முன்னிலைப்படுத்தி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு தரப்பு தயாராகும் நிலையில் அதற்கு ஆளும் கட்சிக்குள்ளே இன்னொரு எதிர்ப்பு அணி மூர்க்கமாக எதிர்க்கத் தொடங்கியுள்ளது.

இதனால்தான் கோத்தாபய மக்களை பயமூட்டி ஆட்சியைத் தக்கவைக்கும் திட்டத்தை கையிலெடுத்துள்ளார்.

இலங்கையின் தற்சார்பு பொருளாதாரத்தை மேம்படுத்த தான் எடுத்துள்ள இறக்குமதி தடைகளால் பாதிக்கப்பட்டுள்ள சர்வதேச நிறுவனங்கள் தனக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொள்கின்றன என்ற வாதத்தை அவர் முன்வைக்கின்றார். அதனால்தான், 2014ஆம் ஆண்டு 'சட்டவிரோதமாக எதனோல்' நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட பரப்புரையை உதாரணம் காட்டுகின்றார். மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதனோல் மாத்திரம் காரணமல்ல. ஆனாலும் அதுவும் செல்வாக்குச் செலுத்தியது.

முன்னாள் பிரதமர் இ.டி.எம். ஜெயரத்னவின் பெயரில் நாட்டுக்குள் சட்டவிரோதமாக எத்தனோல் கொண்டுவரப்பட்ட விவகாரம் பூதாகரமாகியிருந்தமையால் அதனை வைத்து எதிர்க்கட்சிகள் பரப்புரை நடத்தி மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பின என்றும், அதனால்தான் பாதுகாப்பு சீர்குலைந்து ஈஸ்டர் போன்ற தாக்குதல் நடந்தது எனவும் சொல்லும் கோத்தா, அதைப்போன்று எதிர்க்கட்சிகளின் இப்போதைய தேங்காய் எண்ணெய், காடழிப்பு பரப்புரைகளை நம்பி ஆட்சியைக் கவிழ்த்தால் மீண்டும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தலைதூக்கக் கூடும் என்று மக்களை மிரட்டுகிறார்.

ஆட்சிப்பீடமேறி இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே கோத்தாபய செல்வாக்கை இழந்து விட்டார். எதையாவது செய்து அதனைத் தக்க வைக்க படாதபாடுபடுகின்றார். மலையைப் பெயர்க்கும் அவரது முயற்சி ஒருபோதும் வெற்றி பெறப்போவதில்லை.




# மூடப்பட்ட மதுபானசாலையை மீளத் திறக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு

## ஊர்காவற்றுறையில் 8ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.5
ஊர்காவற்றுறையில் மக்கள் எதிர்ப்பால் மூடப்பட்ட மதுபானசாலையை மீண்டும் அமைக்க எடுக்கப்படும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 8ஆம் திகதி காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தீவக சிவில் சமூக அமைப்பு அறிவித்துள்ளது.

மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்றும் அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் தீவக சிவில் சமூக அமைப்பின் பொருளாளர் க.குணாளன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஊர்காவற்றுறை பிரதான வீதியில் இயங்கிவந்த மதுபானசாலை தீவக சிவில் சமூக அமைப்பு, பாடசாலைச் சமூகம், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை நிர்வாகம் மற்றும் மக்கள் நலன் சார்ந்த அமைப்புக்களின் எதிர்ப்பால் 2016ஆம் ஆண்டு மூடப்பட்டது.

தற்போது அந்த மதுபானசாலையை மீளத் திறப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது. கடந்த காலத்தில் சுங்கவீதி, ஊர்காவற்றுறையில் இயங்கிய இந்த மதுபானசாலையை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறையில் மீள இயக்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பாக தீவகம் வடக்கு பிரதேச செயலரால் பொது மக்களுக்கான அறிவித்தல் ஒன்றும் விடுக்கப்பட்டுள்ளது.

புதிய இடத்தில் மதுபானசாலைக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் பிரதேச மக்களின் கருத்துக்களை கடந்த 29ஆம் திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் கிராம அலுவலர் ஊடாகத் தெரியப்படுத்த வேண்டும் என்று அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மதுபானசாலையை நடத்தியவர்கள் 2019ஆம் ஆண்டு மதுபானசாலையை மீள இயக்குவதற்கு பிரதேச செயலர் ஊடாக ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி கோரியிருந்தனர். அப்போது இணைத் தலைவர்களாக இருந்த ஈ.சரவணபவன், சி.சிறீதரன், விஜயகலா மகேஸ்வரன் மற்றும் இ.அங்கஜன் ஆகியோர் அந்தக் கோரிக்கையை நிராகரித்திருந்தனர். இந்தத் தகவல்கள் அனைத்தும் இருட்டடிப்புச் செய்யப்பட்டே தற்போதைய அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதே வேளை, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய குற்றவியல் வருடாந்த அறிக்கையின்படி 2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்தப் பகுதியில் குடும்ப வன்முறை, குழு மோதல்கள் மற்றும் வன்முறைகள் கணிசமாகக் குறைந்துள்ளன. இதற்கு மதுபானசாலை மூடப்பட்டமை முக்கிய காரணமாகும். தற்போது மதுபானசாலையை இடம் மாற்றி மீள இயக்குவதற்கு முயற்சிக்கின்றனர். இயங்கிக்கொண்டிருக்கும் மதுபானசாலையை இடமாற்றுவது போன்ற மாயையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றனர். நீண்டகாலத்தின் பின்னர் தற்போது எடுக்கப்படும் இந்த முயற்சியில் அரசியல்வாதிகளின் பின்புலம் இருக்கின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. மதுபானசாலையை மீண்டும் திறக்கும் முயற்சியை சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்த வேண்டும். குறித்த மதுபானசாலையை மீளத் திறக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 8ஆம் திகதி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. என்றுள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் அறிக்கை ஆய்வு கோத்தாவிடம் கையளிப்பு

கொழும்பு, ஏப். 5

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு தனது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் இன்று கையளிக்கும் என்று அந்த உபகுழுவின் தலைவர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த உபகுழு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

# சட்டவிரோத குடியேற்றம் குறித்து இம்ரான் கவனம்

திருகோணமலை, ஏப்.5

கிண்ணியா எல்லைப்பிரதேசத்தில் இடம்பெறும் காடழிப்புடன் கூடிய சட்டவிரோத குடியேற்றம் தொடர்பிலும் கிண்ணியாவில் எல்லையை அடையாளப்படுத்த வேண்டிய அவசியம் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கவனம் செலுத்தியுள்ளார்.



கிண்ணியா பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட ஆயிலியடி, மஜீத் நகர் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட செம்பிமோட்டை இரட்டைக்குளம், சுண்டியாறு, புளியங்குளத்தை அண்டிய பிரதேசம் மற்றும் வாழைமடு போன்ற பிரதேசங்களில் கிண்ணியா பிரதேச மக்கள் 50 வருடங்களுக்கு மேலாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்

1980 களில் ஏற்பட்ட யுத்தத்தால் தமது விவசாயக் காணிகளை கைவிட்ட இந்த மக்கள் படிப்படியாக தமது காணிகளில் குடியேறி விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் கடந்த வாரம் இந்தப் பிரதேசத்துக்கு எந்த வகையிலும் சம்மந்தமில்லாத ஆயிரக்கணக்கான பெரும்பான்மை யின மக்கள் சில பௌத்த தேரர்களின் தலைமையில் கனரக வாகனங்களைப் பயன்படுத்தி காடுகளை அழித்து கூடாரங்களை அமைத்து குடியேற முயற்சித்த வேளை அந்த இடத்தில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

பின்னர் அவ்விடத்துக்கு வந்த முப்படையினர், வனவிலங்கு அதிகாரிகள் தலையீட்டால் அவர்கள் கலைந்து சென்றாலும் மீண்டும் வருவார்கள் என்ற அச்சநிலை மக்களிடத்தில் நிலவுகிறது.

இந்நிலை தொடர்பாக ஆராய்வதற்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கடந்த வியாழக் கிழமை இந்தப் பிரதேசத்துக்கு நேரடியாக விஜயம் செய்தார்.

இந்த இடத்துக்கு கிண்ணியா பிரதேச செயலாளர் மற்றும் காணி உத்தியோகத்தர் உள்ளிட்ட குழுவினரையும் அழைத்து இந்தச் சட்டவிரோத குடியேற்ற முயற்சி சம்மந்தமாக அவ்விடத்தில் திருகோணமலை மாவட்டச்செயலருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடினார்.

இதன்போது சட்டவிரோத குடி யேற்றத்தை நிரந்தரமாகத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கிண்ணியாவில் எல்லையை அடையாளப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (ற-150)

## மாகாண சபைகளை முற்றிலும் மறந்து செயற்பட முடியாது

*அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு*

கொழும்பு,ஏப்.5

"மாகாண சபைகள் முறைமை அரசமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாகும். எனவே, மாகாண சபைகளை முற்றிலுமாக மறந்து ஏனைய தேர்தலை நடத்த முடியாது" இவ்வாறு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாகாண சபை தேர்தல் தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் தீர்மானமின்றி நிறைவடைந்தது.

இது முதலாவது கலந்துரையாடல், முதலாவது கலந்துரையாடலில் எந்தவித தீர்மானத்துக்கும் வர முடியவில்லை.

நாம் அமைத்த கூட்டணியை பாதுகாத்துக் கொள்வதே எமது முயற்சி. மாகாண சபைகள் எமது அரசமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாகும். மாகாண சபைகளை முற்றிலுமாக மறந்து தேர்தலை நடத்த முடியாது - என்றார். (ஐ-இ)

## அரசால் ரூபாவின் பெறுமதியையும் நாட்டையும் கட்டுப்படுத்தவே முடியாது

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஏப். 5

தற்போதைய அரசால் ரூபாவின் பெறுமதியையும் நாட்டையும் கட்டுப்படுத்த முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். மேலும் அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதியைக் குறைப்பதன் ஊடாக நாட்டின் நிலைமையைப் புரிந்துகொள்ள முடி கின்றது என்றும் தெரிவித்தார்.

அதாவது, சிம்பாவேயின் நிலைக்குள் படிப் படியாக நாடு நகர்கிறது எனவும் கவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவது குறித்து அரசு ஏற்கனவே கவலை கொண்டுள்ளது என நிதி, மூலதன சந்தைகள் மற்றும் பொது நிறுவன சீர்திருத்தங்கள் துறை அமைச்சர் அஜித் நிவாரட் கப்ரால் தெரிவித்துள்ளார். அத்துடன் இது ஒரு தற்காலிக சம்பவம் என்றும், எதிர்காலத்தில் ரூபாவை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

ஈஸ்டர் தாக்குதல்

## எவருக்கெதிராகவும் இதுவரை குற்றப்பத்திரம் தாக்கல் இல்லை

கொழும்பு, ஏப். 5




உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஈராண்டுகள் நெருங்கினாலும்கூட தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவருக்கேனும் நீதிமன்றில் இன்னமும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான சட்டத்தரணி அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் அமெரிக்காவில்கூட வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவருக்கேனும் இலங்கை நீதிமன்றத்தில் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. அத்துடன், தாக்குதல் சம்பவத்தின் பின்னணி மற்றும் பிரதான சூத்திரதாரிகளும் கண்டறியப்படவில்லை. அதனை நோக்கி விசாரணைகள் நடைபெறுகின்றனவா எனவும் தெரியவில்லை. கட்டாயம் தாக்குதலின் பின்புலம் மற்றும் பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்படவேண்டும். அப்போதுதான் நீதி கிடைக்கும்- என்று அவர் தெரிவித்தார். (த-44)



# சிங்கராஜ வனத்துக்காக உரிய சட்ட நடவடிக்கை

**ரணில் தெரிவிப்பு**

கொழும்பு, ஏப். 5

அரசின் வன அழிப்புக்களுக்கு எதிராகவும், சிங்கராஜ வனம் அழிக்கப்பட்டமை தொடர்பாகவும் விரைவில் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க.

அரசின் வன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடும் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் வரவிருக்கும் சித்திரைப் புத்தாண்டில் அனைவரும் பச்சை நிற ஆடைகளை அணிய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் வெள்ளிக்கிழமை கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவுக்கு முன்பாக அரசாங்கத்தின் வன அழிப்புக்கு எதிராக ஓவியக் கண்காட்சியும் கண்டன ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்படும்.

சிங்கராஜ வனம் சிறப்புரிமை பெற்றது. அத்துடன் யுனெஸ்கோ பாரம்பரியமாகவும் உள்ளது. எனவே அதை அழிப்பதற்கு எவருக்கும் எந்த உரித்தும் இல்லை. ஐ.நா. உட்பட தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு சிங்கரான வன அழிப்பு குறித்து அறிவிப்போம். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கும் உத்தியோகப்பூர்வமாக அறிவிப்போம். அத்துடன் நீதிமன்றத்தின் மூலமாகவும் சிங்கராஜ வனத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள்



**மேடம்:** தைரியம் கூடும். எதிர்ப்புகள் விலகும். அனுசரித்து செல்வீர்கள். பேச்சுவார்த்தையில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். மனம் தெளியும்.

**இடபம்:** முயற்சிக்கு ஏற்ற நற்பலன் இருக்கும். பெருமிதம் வரும். புதிய முயற்சியில் நினைத்த முன்னேற்றம் சற்றே தாமதப்படும். உங்களின் அவசரப் பேச்சால் சிரமங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** தெளிவுடன் உங்கள் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களுக்கு நல்ல அறிவுரை வழங்கி நன்மை செய்வீர்கள். அவப்பெயர் ஏற்படுத்திக் கொண்ட நிலை இன்று மாறும்.

**கடகம்:** வருமானத்துக்கு குறைவிருக்காது. மனதில் தெளிவு வரும். மேலதிகாரிகளை அனுசரித்து நடந்து கொள்வீர்கள். முயற்சி நிறைவேற கடின உழைப்பைக் கைகொள்வீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தினரின் நடவடிக்கைகளால் ஏற்பட்டிருந்த வருத்தங்கள் தீரும். பேச்சுவார்த்தை தீர்வு தரும். காலில் ஏற்பட்ட உபாதை சரியாகும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும்.

**கன்னி:** நெருங்கிய உறவினரால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும் முயற்சியில் உள்ள தடைகளை நீக்க நடவடிக்கைகள் எடுப்பீர்கள். அரசியல் ஈடுபாடு உள்ளவர்களுக்கு நற்செய்தி உண்டு.

**துலாம்:** புதிய விஷயங்களைக் கற்றுப் பணியில் சிறப்படைவீர்கள் மனதுக்கு நெருங்கியவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சக பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும்

**விருச்சிகம்:** அதிர்ஷ்டம் உண்டு. சுப நிகழ்ச்சி முயற்சிகள் வெற்றிய டையும். சொத்துக்கள் தொடர்பான செயல்களில் முன்னேற்றம் உண்டு. பொருளாதாரத்தில் இருந்த பின்னடைவு தீரும்.

**தனுசு:** மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலருக்கு திருமணம் முடிவாகும். வேலைப்பளு காரணமாக சோர்ந்தவர்களுக்கு சம்பளம் உயரும். எதிலும் அவசரமாக முடிவெடுக்காமல் கவனம் காப்பீர்கள்.

**மகரம்:** எதிர்கால முதலீட்டு எண்ணம் சிலருக்கு உண்டாகலாம். தைரியம் கூடுவதால் நடவடிக்கை எடுத்து முன்னேறுவீர்கள். பிரச்சினை ஏற்பட்டாலும் தைரியத்தை விடாமல் ஜெயிப்பீர்கள்

**கும்பம்:** பணிக்கான முயற்சி எடுக்கும் நாள். விரோதங்கள் விலகும். பல நாளாக முனைந்து செய்த முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். தன்னம்பிக்கை கொள்ளுங்கள். செயல்களில் நேர்த்தி இருக்கும்.

**மீனம்:** வருமானம் போதுமானதாக இருக்கும். பேராசை வேண்டாம். உங்கள் துணிச்சலான செயல் மற்றவர்களால் பாராட்டப்படும். செலவாகும் என்று நினைத்த விஷயம் குறைந்த செலவில் முடியும்.

# இந்தியாவின் தேவையை நிறைவுசெய்யவே இலங்கைக்கான தடுப்பூசி நிறுத்தப்பட்டது

## கொழும்பு ஊடகம் தகவல்

**கொழும்பு, ஏப்.5**

**இந்திய மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே கொரோனாத் தடுப்பு ஊசிகளை இலங்கைக்கு அனுப்புவதை நிறுத்தியுள்ளது இந்தியா என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.**

ஒக்ஸ்போர்ட் அஸ்ராஜெனகா கொவிசீல்ட் தடுப்பூசிகளை இலங்கைக்கு அனுப்புவதை இந்தியா நிறுத்தியது தொடர்பில் அரசியல் ரீதியான கருத்துக்கள் கூறப்பட்டு வந்த நிலையில், கொழும்பு ஊடகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இந்தியாவில் உள்ள 45 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை ஏற்ற வேண்டிய தேவை உள்ளதால், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இந்தியா அனைத்து நாடுகளுக்கும் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை நிறுத்தியுள்ளது. அதன்படியே இலங்கைக்கும் தடுப்பூசிகளை வழங்குவதை இந்தியா நிறுத்தி யுள்ளது என்று அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ப)



# சஹ்ரானுக்கு புலனாய்வுப் பிரிவு சம்பளம் வழங்கியதேன்?

## கேள்வி எழுப்புகிறார் சம்பிக்க

கொழும்பு, ஏப். 5

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று சொல்லப்படும் சஹ்ரானுக்கு 2010ஆம் ஆண்டு வரை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் ஊதியம் வழங்கப்பட்டமைக்கான காரணம் வெளிப்படுத்தப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கோரினார்.

எந்தவொரு தீவிரவாத அமைப்பின் தலைவரும் தனது தாக்குதலில் தற்கொலை செய்து கொண்டு உயிர்மாய்ப்பதில்லை.

எனவே இலங்கையில் தாக்குதல் நடத்திய சஹ்ரானை இயக்கியவர்கள் யார் என்பது கண்டறியப்பட வேண்டும்.

சஹ்ரான் மற்றும், தௌ ஹீத் ஜமாஅத் அமைப்புக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு 2010ஆம் ஆண்டு வரையில் ஊதியம் வழங்கியுள்ளது. காத்தான்குடியில் 2007 ஆம் ஆண்டு சிலருக்கு ரி/56 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. போர் முடிந்த பின்னரும் அவை அவர்களிடமிருந்து மீளப் பெறப்படவில்லை.

தாஜ்சமுத்திரா ஹொட்டலில் குண்டு வெடிக்கச் செய்யச் சென்ற தற்கொலை குண்டுதாரி அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என்றதும் தெஹிவளைக்கு திரும்பிச் சென்றார். அவர் அங்கு செல்ல முன்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரைச் சந்தித்திருந்தார் என்று பொலிஸ்மா அதிபர் வழங்கிய சாட்சியம் தொடர்பிலும் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும், என்றார். (ஒ.இ)

# புத்தாண்டு கொண்டாட்டம்: சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, ஏப். 5

சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களின்போது, பொதுமக்களும் விழா ஏற்பாட்டாளர்களும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் தொடர்பில் சிறப்புச் சுற்றறிக்கை சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய சில பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அலுவலகங்கள், நிறுவனங்களில் கொண்டாட்டங்களின் போது 100க்கும் குறைவான நபர்களே பங்குபற்ற வேண்டும் என்றும் சுற்றறிக்கை குறிப்பிடப்பட்டுள் ளது.

அத்துடன், கோவில்கள் மற்றும் விகாரைகளுக்குச் செல்வோர் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை நிச்சயம் பின்பற்ற வேண்டும், இயன்றளவு உறவினர்களின் வீடுகளுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வதோடு நிகழ்வுகளை நடத்துவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் . இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சகல விதிமுறைகளுக்கும் அமைய கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும் பட்சத்தில், அது தொடர்பான வாக்குறுதி அறிவிப்பின் ஆவணத்தை பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகரிடம் கையளிக்க வேண்டும் என்றும் மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## சீனத் தடுப்பூசிக்கு எதிராக

# போர்க்கொடி தூக்கியவரின் பதவியைப் பறித்தார் பவித்திரா



கொழும்பு, ஏப். 5

உலக சுகாதார நிறுவனத்தால் அனுமதிக்கப்படாத சீனாவின் சைனோஃபார்ம் தடுப்பூசியை இலங்கை மக்கள் பயன்படுத்தக் கூடாது என்று பல தரப்பும் குரல் எழுப்பி வரும் நிலையில், இந்த நிலைப்பாட்டை ஆதரித்த தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உறுப்பினரும், கொரோனாத் தடுப்பூசிகள் குறித்த சுயாதீன நிபுணர் குழுவின் உறுப்பினருமான மருத்துவ நிபுணர் லக்குமார் பெர்னாண்டோவை, சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி பதவி நீக்கம் செய்துள்ளார்.

"சைனோஃபார்ம் தடுப்பூசியை உற்பத்தி செய்த நிறுவனம் உரிய தரவுகளை வழங்கவில்லை. உலக சுகாதார நிறுவனமும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறானதொரு நிலையில் இலங்கையில் இதனைப் பயன்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கக்கூடாது. மக்களின் பாதுகாப்புக்கான நுழைவாயில் காவலர்களாக இருக்கும் நாங்கள் இதனை அனுமதிக்க முடியாது" என்று லக்குமார் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இந்த நிலையில் தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் உறுப்பினர் பதவியிலிருந்து இவரை நீக்குகிறேன் என கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி அறிவித்துள்ளார். (ஒ.இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயரான மறைந்த இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமாகிய ஈஸ்வரபாதம் சரவணபவன் மன்னார் ஆயர் இல்லத்தில் இறுதி அஞ்சலியை நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார். (ம-319)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி தூய திருமுழுக்குயோவான் ஆலய பங்கு மக்களின்

கண்ணீர் காணிக்கை



மேதகு கலாநிதி

இராயப்பு யோசேப்பு ஆண்டகை

"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன" (உரோ 11.15)

ஆன்மீகத்தில் உறுதியாக, ஆண்டவரில் நம்பிக்கையுடன் மனிதர் மத்தியில் இறைவாக்குரைப்போராக, ஒடுக்கப்பட்டோரின் குரலாக கம்பீர தோற்றத்துடன் எம் பங்கில் பணியாற்றி இன்றும் எம் சிந்தனையில் நிலைத்து நிற்கின்ற ஆயரின் வாழ்வு புனிதமானது. இறைதூதுவராக எம் மத்தியில் வாழ்ந்தார். இன்று கடவுளுடன் இணைந்துள்ளார். ஆண்டவரின் நித்திய இளைப்பாற்றுதலின் பேரின்பத்திற்குள் ஆயரின் ஆன்மா அமைதியடைவதாக.

"இறைவா உமக்குப் புகழ்"

பங்குத் தந்தை,
பங்கு மக்கள்
யாழ்ப்பாணம் சுண்டிக்குளி தூய திருமுழுக்குயோவான் ஆலயம்.

# புத்தாண்டு பலகாரம் தயாரிக்கக் கூட நாட்டு மக்களுக்கு பேரச்சம்!

## ஐ.தே.க. சாடல்

கொழும்பு, ஏப். 5

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணையை அரசு இறக்குமதி செய்துள்ளது. எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு பலகாரம் செய்வதற்கும் மக்கள் அச்சப்படுகின்றார்கள். மக்களின் அச்சத்தைப் போக்கவும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கராஜ வனம் உள்ளிட்ட பல காடுகள் அரசால் அழிக்கப்படுகின்றன. அபிவிருத்தி என்ற நாமத்தை முன்னிறுத்தி இந்த வளங்களை அழிக்கின்றனர். இதற்கு எதிராக நாம் போராடுவோம். சூழலைப் பாதுகாப்பதற்கு ஒரு சில அதிகாரிகள் துணிவாக முன்வந்தாலும் அவர்களை அடக்கி ஒடுக்கி பழிவாங்கவே அமைச்சர்கள் முனை கின்றனர். இதைவிட புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய தேங்காய் எண்ணை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மக்கள் இன்று இந்தத் தேங்காய் எண்ணையால் அச்சமடைந்துள்ளனர். அவர்களின் அச்சத்தைப் போக்கவும் எந்த நடவடிக்கையுமில்லை - என்றார். (ஒ.இ)



# முடங்கியது வங்கம்!


டாக்கா, ஏப். 5

பங்களாதேஷில் நாளுக்கு நாள் கொரோனாவின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், முன்னெச்சரிக்கையாக அடுத்த ஒரு வாரத்துக்கு முழு நாடும் முடக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்று வரையான கடந்த 24 மணிநேரத்தில் பங்களாதேஷில் சுமார் 7 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதை அடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## 'அஸ்ரா ஜெனகா' செலுத்திய ஏழு பேர்

# குருதி உறைவால் பிரிட்டனில் சாவு!




**லண்டன், ஏப். 5**

**பிரிட்டனில் கொரோனாத் தடுப்பூசி செலுத்திய (அஸ்ட்ரா செனகா) 7 பேர் குருதி உறைவால் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

கொரோனா வைரஸுக்கு எதிராக இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம், அஸ்ட்ரா செனகா நிறுவனம் ஆகியவை இணைந்து ஒரு தடுப்பு மருந்தை உருவாக்கின.

இந்த தடுப்பூசிக்கு இங்கிலாந்து அரசு அவசர கால அனுமதி வழங்கியதை அடுத்து பொதுமக்களுக்கு செலுத்தப்பட்டது. அதேபோல் அஸ்ரா ஜெனாவின் தடுப்பு மருந்து ஐரோப்பிய நாடுகளிலும் மக்களுக்கு போடப்பட்டு வருகிறது.

தடுப்பூசி ஏற்றப்பட்டு சில நாள்களில் குறித்த தடுப்பூசியைச் செலுத்திய ஆஸ்திரலியப் பெண்ணொருவர் குருதி உறைவு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார் என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த தடுப்பூசியை ஏற்றிய இங்கிலாந்தைச் 7 பேர் குருதி உறைவு ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர் என்று நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அவர்களை விட மேலும் 30 பேருக்குக் குருதி உறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



# தைவானில் தடம்புரண்டது ரயில் 48 பேர் இறப்பு: 66 பேர் காயம்!

தைவானில் ரயிலொன்று தடம் புரண்டதில் 48 பேர் உயிரிழந்தனர். 66 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்று தெரிவிக்கப்பட்டது. தைவானின் தைபே நகரிலிருந்து தாய்டூங் நகருக்குச் சென்ற ரயிலே விபத்துக்குள்ளானது. இது குறித்து தகவல் அறிந்த மீட்புப் படையினர் அங்கு உடனடியாக சென்று, ரயிலில் இருந்த பயணிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். 48 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் தொடர் கின்றன. காயமடைந்த 66 பேரில் சிலரின் நிலை கவலைக்கிடம் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது ஆயரின் புகழுடல்

மன்னார், ஏப் 5

**மன்னார் மாவட்டத்தின் முன்னாள் ஆயரான இராயப்பு ஜோசப் ஆண்டகையின் புகழுடல் மன்னார் மாவட்ட மக்களின் இறுதி அஞ்சலிக்காக புனித செபஸ்ரியார் பேராலயத்தில் நேற்று வைக்கப்பட்டது.**

கடந்த வியாழக்கிழமை இயற்கை எய்திய மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அமரர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் புகழுடல், மன்னார் ஆயரின் இல்லத்திலுள்ள சிற்றாலயத்திலிருந்து மன்னார் பேராலயமான புனித செபஸ்ரியார் ஆலயத்துக்கு மக்கள் அஞ்சலிக்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை வைக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஏ.விக்டர் சோசை அடிகளார் ஆயர் இல்லத்தில் இறுதி வழிபாட்டை நடாத்தியதைத் தொடர்ந்து ஆயரின் திருவுடல் திறந்த வாகனத்தில் ஆயரின் இல்லத்திலிருந்து மன்னார் நகர் பிரதான வீதியில் மன்னார் நகரூடாக மிக நீண்ட தொடர் வாகன அணியுடனும் பான்ட் இசைகளுடனும் வீதியோரங்களில் மக்கள் வெள்ளம் புடைசூழ மன்னார் பேராலயத்துக்கு எடுத்து வரப்பட்டது. மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் வழிபாட்டைத் தொடர்ந்து மக்களின் அஞ்சலிக்காகவும் வழிபாட்டுக்காகவும் புகழுடல் வைக்கப்பட்டது. (ம-60,56)

# இறுதிச்சடங்கில் குளவித்தாக்குதல்

கண்டி, ஏப்.5

சடலத்தை புதைப்பதற்கு மயானத்துக்கு எடுத்துச் சென்றவர்கள், பட்டாசு கொளுத்தியதில் கலைந்த குளவிகள், அங்கு நின்றவர்களை தாக்கியுள்ளன.

இந்த சம்பவம் கண்டி மஹியாவ பொது மயானத்தில் இடம்பெற்றுள்ளது.

குளவிக் கொட்டுக்கு இலக்கானவர்கள் கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது; சடலத்தை மயானத்தில் வைத்துவிட்டு, இறுதிச் சடங்குகளை மேற்கொண்டுள்ளனர். இதன்போது பட்டாசும் கொளுத்தப்பட்டுள்ளது. அந்த சத்தத்தால் கலைந்த குளவிகள் அங்கு நின்றவர்கள் மீது கொட்டியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

# இலங்கை கடலில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதி?

## எதிர்த்து போராடுவோம் என்று இலங்கை மீனவர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.5

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவார்களாயின், அதற்கு எதிராக கடும் நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று அகில இலங்கை மீனவர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர் எனவும், இதனால் உள்நாட்டு மீனவர்கள் மிகப் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்றும் அகில இலங்கை மீனவர்கள் சங்கத்தின் தலைவர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார். (ஐ-22)

# கண் சிகிச்சை முகாமால் 112 பேருக்கு மேல் பயன்

வலி.தென்மேற்கு, ஏப்.5

வலி. தென்மேற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கண்சிகிச்சை முகாமில் 112 பேருக்கு மேல் முழுமையான கண்சிகிச்சையின் பயனைப் பெற்றுள்ளனர் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினரும் தந்தை செல்வா ஞாபகார்த்த நற்பணி மன்றத்தின் நிறுவுநருமான கணபதிப்பிள்ளை தளையரட்ணம் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் ஞாபகார்த்தமாக வலி. தென்மேற்கு பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கண்சிகிச்சை முகாமிலேயே இவர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த சிகிச்சை முகாம் வலி. தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான சி. மகேந்திரன் தலைமையில் பண்டத்தரிப்பு வை.எம் சி.எ மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் சிகிச்சையில் கண்ணாடி தேவையானவர்களுக்கு மூன்று வாரங்களில் பெறுமதிமிக்க கண்ணாடி வழங்கப்படும் என நற்பணி மன்றத் தலைவர் மேலும் தெரிவித்தார். (ற-50)

# புரிந்துணர்வைக் கட்டியெழுப்ப பெரும் பங்காற்றியவர் ஜோசப் ஆண்டகை

## பேராயர் இரங்கல்

கொழும்பு, ஏப். 5

நாட்டில் இனங்களுக்கிடையிலான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பவும் மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்த்தெடுக்கவும் பெரும் பங்களிப்பை இராயப்பு யோஜப் ஆண்டகை நல்கியுள்ளார் என்று, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் பேச்சுவார்த்தைகள் ஊடாக நிலையான அமைதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். எனினும் எதிர்பாராத விதமாக மக்கள் பிரதிநிதிகளுக்கிடையே மேற்படி கருத்தாடல்கள் முழுமையான வெற்றியை அளிக்கவில்லை.

எனினும், அவரது இடைவிடாத முயற்சியும் அமைதிக்கான வழிகாட்டுதலும் பல்லின பல்சமய பண்பாட்டு மயமாக்கல் நல்லுறவுக்கும் ஆற்றிய பணியை நான் நினைவு கூர்கின்றேன் என்று தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதி தலைமையில் தேசிய புத்தரிசி விழா

கொழும்பு, ஏப். 5

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை ஜய ஸ்ரீ மகா போதிக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தலைமையில் நேற்றுமுற்பகல் அனுராதபுரம் வரலாற்று முக்கியத்துவமிக்க .ஜெய ஸ்ரீ மகாபோதி வளாகத்தில் இடம்பெற்றது.

54ஆவது தடவையாக இடம்பெற்ற தேசிய புத்தரிசி விழாவை அட்டமஸ்தானாதிபதி கலாநிதி சங்கைக்குரிய பல்லேகம ஸ்ரீநிவாச நாயக்க தேரரின் ஆலோசனையின் பேரில் விவசாயத்துறை அமைச்சும் கமநல சேவைகள் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

உரிய பருவ காலத்தில் மழை கிடைக்கப்பெற்று தமது பயிர் நிலங்கள் செழிப்புற்று விளங்க இயற்கையின் பலமும் ஆசிர்வாதமும் கிடைக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் நாலா திசைகளிலும் இருந்து வருகை தந்திருந்த விவசாய சமூகத்தினர் புத்தரிசி விழா சம்பிரதாயங்களில் பங்குபற்றினர். (ம)

# ஆயுதத்தால் தாக்கப்பட்டு 19 வயது யுவதி கொலை

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 19 வயது யுவதி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கலேவெல, பட்டிவெல சந்தி யில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. குடும்பப் பிரச்சினை காரணமாக இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-இ)




## கண்ணீர் அஞ்சலி

யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை
ஆசிரியை திருமதி டொறின் சுவேந்திரராஜா
அவர்களின் பாசமிகு தாயார்

**மரிஸ்ரலா பேதுருப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்

தோற்றம் 23.05.1942 மறைவு 02.04.2021

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினர்
திரு இ.கணேசலிங்கம் (சின்னமணி)
அவர்களின் அன்புச் சகோதரன்

**அமரர் இராமசாமி திருச்செல்வம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகரை வேண்டுகிறோம்.

**பரிபாலன சபையினர்**
**ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்**
**உரும்பிராய்.**


# போக்குவரத்து சட்டங்களை மீறிய சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஏப்.5

கடந்த ஒரு வார காலப்பகுதியில் மோட்டார் சைக்கிள் பயண விதிமுறைகளை மீறிய 13 ஆயிரத்து 320 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மோட்டார் சைக்கிள் விபத்துக்களை தடுக்கும் நோக்கில் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, தலைக்கவசம் தொடர்பில் ஆயிரத்து 977 பேருக்கும், அனுமதிப்பத்திரம் தொடர்பில் ஆயிரத்து 303 பேருக்கும், மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 398 பேருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கவனவீனமாக மோட்டார் சைக்கிள் செலுத்திய 139 பேருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 450 மோட்டார் சைக்கிள்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன - என்றார்.

(ஐ-இ)

முதலாம் பக்க தொடர்ச்சி......

*அரசுக்கு....*

கிக்கொள்ளுங்கள்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார். இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றதற்கு ஆதாரங்கள் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே எம்.கே.சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இலங்கையில் இனப்படுகொலை இன்று நேற்று அல்ல நீண்ட காலமாக நடைபெற்ற ஒரு விடயம். வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்லாது மாகாண சபையில் அங்கம் வகித்த அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்போடு இனப்படுகொலை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1977ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இனப்படுகொலை நடந்தமைக்குப் பல்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பில் விசாரிக்க வேண்டும் என்றே நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம்.

1965ஆம் ஆண்டு காலத்தில் இடம்பெற்ற ஒப்பந்தத்தில்கூட இனப்படுகொலை நடந்தமை தொடர்பான விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கூட இனப்படுகொலை தொடர்பான விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணியான எம்.ஏ.சுமந்திரன் கூறுகின்றார். நான் அவருக்கு இனப்படுகொலை விடயம் தொடர்பில் விளங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அரசுக்கு நொந்துவிடும் என்பதற்காக இனப்படுகொலை நடக்கவில்லை என்று கூறி உண்மையை மறைக்காதீர்கள். எமது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

உங்களால் முடியாவிட்டால் ஒருபக்கம் ஒதுங்கிக்கொள்ளுங்கள். இனப்படுகொலை தொடர்பான ஆதாரங்களை நாங்கள் திரட்டுகின்றோம். எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் நடந்த தாக்குதல்கள், படுகொலைகள் தொடர்பில் ஆதாரங்களைச் சேகரித்துக் காட்டுகின்றோம். என்றார்.

(எ-26)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தர்மலிங்கம்



அருணர் வளவு, திக்கத்தை பிறப்பிடமாகவும் ராணி பவன், கம்பர்மலையை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தர்மலிங்கம் நேற்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், அருந்தவராணியின் அன்புக் கணவரும், சர்மிலன் (Quantity Surveyor, Qatar), கிரிஷாந்தி (QA Engineer, Canada), தனசாந்தி (Management Assistant, University of Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்துரு (IT Consultant, Canada), செந்தூர் (Senior Engineer, National Water Supply and Drainage Board, Vavuniya) ஆகியோரின் மாமனாரும், பாலசுப்பிரமணியத்தின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராணிபவன்,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

076 369 8282
+94776441986 (WhatsApp)

தோற்றம் 10.12.1951
மறைவு 04.04.2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### செல்வி.வல்லிபுரம் சிவனேஸ்வரி

மலர்வு 28.10.1944 உதிர்வு 04.04.2021


ஆண்ட தோட்டம் , திக்கம், அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்தில் தங்கியிருந்தவருமான வல்லிபுரம் சிவனேஸ்வரி அவர்கள் 04.04.2021 ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.04.2021 ஞாயிற்றுக் கிழமை ஸ்ரீபரமானந்தா சிறுவர், முதியோர் இல்லத்தில் நடைபெற்று வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தலைவர்**
**ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்**
**வதிரி, கரவெட்டி**

**தகவல்**
**திரு.ஆ.சிவசுவாமி**

## மரண அறிவித்தல்



### சிவஸ்ரீ ப. சச்சிதானந்தக் குருக்கள்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் 60 ஆண்டு காலம் குரு பணியாற்றியவரும் முள்ளியவளை குமாரபுரம் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய ஆதீனகர்த்தாவும் தற்போது நல்லூரில் வசித்தவருமான சிவஸ்ரீ ப. சச்சிதானந்தக் குருக்கள் அவர்கள் நேற்று (04.04.2021) இறைவனின் திருப்பாத கமலங்களை அடைந்து விட்டார்.

அன்னார் பாகீரதி அம்மாளின் அன்புக்கணவரும், திவாகரன், பிரபாகரன் (இந்திய துணைத் தூதரக அலுவலர்) அவர்களின் அன்புத் தந்தையும், கஜலக்ஷ்மி (ஆசிரியர், சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு), சீதாலக்ஷ்மி (சிரேஷ்ட விரிவுரையாளர் நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும், பரத், அக்ஷை, ஸ்நேஹா, அபிஷேக், நிதேஷ் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.04.2021) திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7/9A, **பண்டாரக்குளம்**
**மேற்கு ஒழுங்கை, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0777 599 096,**
**0777 574 628**

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 03 . 1956



இறப்பு 24 . 03 . 2021

### கனகசபாபதி தவேந்திரன் (தவே)

யாழ். நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாக வும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கனக்சபாபதி தவேந்திரன் அவர்கள் கடந்த (24.03.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - நாகரத்தினம் (மாணிக்கம்) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் விசாகரத்தினம் (ராசன்), கருணானந்தன் (தோமஸ் - பிரான்ஸ்), தர்மதேவி (செல்வம் - அவுஸ்ரேலியா), நகுலேந்திரன் (சூட்டி) ஆகியோரின் அன்புச் சகோத ரனும் யோகநாதன் (அவுஸ்ரேலியா), கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதர்சினி (அவுஸ்ரேலியா), திருவுளன் (அவுஸ் ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வைஷ்ணவி (அவுஸ் ரேலியா), சிவகுலன், கஜேந்திரன், திபேந்திரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse இல் பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2021) செவ்வாய்க்கிழமை 8.45-10.45 வரை நடை பெற்று தொடர்ந்து 11.20-12.30 வரை இறுதி அஞ்சலி நடைபெற்று தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

71/17, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1594

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மோ. சைக்கிளை மோதித் தள்ளியது ஓட்டோ: இருவர் காயம்

வவுனியா,ஏப்.5

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை, முச்சக்கர வண்டி யொன்று மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் கடும் காயங்களுக்கு உள்ளா கிய நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு வவுனியா குருமன்காட்டுப்பகுதி யில் இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென் றவர்கள் தூக்கி வீசப்பட்ட நிலையில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு மருத் துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தை ஏற்படுத்திய முச்சக்கர வண்டி யின் சாரதி குறித்த இடத்தில் நிற்காமல் அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளார் என்று காயமடைந்தவர்கள் தெரிவித் தனர் சம்பவ இடத்துக்கு வந்த பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்த னர். (ப-110)

## துயர் பகிர்கின்றோம்



தோற்றம்: 27.06.1942
மறைவு : 01.04.2021

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி வர்த்தக ஆசிரியர் **திரு.ந.பாலச்சந்திரன்** அவர்களின் அன்புத் தந்தை

### முருகேசு நடராஜா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்**
**அ.பீற்றர்சந்தியா**
**த.நவீந்திரன்**
**தே.செந்தூரன்**

## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 31 . 03 . 1923



அம்மன் மடியில் 12 . 04 . 2004

### அமரர் பண்டாரி வேலாயுதம்

**திதி : பங்குனி தேய்பிறை நவமி (05.04.2021)**

ஆண்டுகள் பதினேழு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை எம் இதயம்
அன்பும், பாசமும், கருணையும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி, வேரர் கேணியடி

என்றும் உங்கள் நினைவில்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வீட்டின் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப்.5

வாள்கள், கொட் டன்களுடன் வந்த இனந்தெரியாத நபர்கள், யாழ்ப்பா ணம்,கொழும்புத் துறைப் பகுதியில் உள்ள வீடொன் றின் மீது நேற்று இரவு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கொழும்புத்துறை விதானையார் வீதியில் உள்ள வீடொன்றின் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கி ளில் வாள்கள், கொட்டன்களுடன் வந்தவர்களே தாக் குதலை மேற் கொண்டுள்ளனர். சம்பவம் தொடர் பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டனர். (ப-20)

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
## விலை மனு கேள்விக்கான அழைப்பு
## சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு அமர்த்துதல்

1. பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமை வாய்ந்தவர்களிடம் கீழ்வரும் சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு அமர்த்துவதற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| இல | விபரம் | இடம் | மீளளிக்கப்ப டாதபணம் | மீளளிக்கப்படும் பிணைப் பணம் |
|---|---|---|---|---|
| RDHS/Staff Canteen/PPD/2021-2022/NC 05 | ஊழியர்களுக்கான சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு அமர்த்துதல் | ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை | 1000.00 | 5000.00 |

2. தகுதிவாய்ந்தமற்றும் இதில் விருப்பமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களைஅலு வலக நேரங்களில் (021 2222278/4557. ext20) பிராந்தியசுகாதாரசேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

3. ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாதமுறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

4. விருப்பமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் கேள்விப் படிவம் பெறுகைக்கான விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய பெறுகைக்கு மேலே குறிப் பிட்ட மீளளிக்கப்படாத தொகையை காசாக செலுத்தி பெறுகைப் பத்திரத்தினை அலுவலக நாட்களில் 05.04.2021 தொடக்கம் 20.04.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

5. விலைக்கேள்விகள் 20.04.2021 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 20.04.2021 ஆம் திகதிகாலை 10.00 மணிக்கு திறக்கப்படும் இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமூகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்டுள்ளது

02.04.2021 வெள்ளிக்கிழமை தட்டாதெருச் சந்தியில் இருந்து நல்லூர் கோயிலுக்கு. செல்லும் வழியில் கைபை (பேர்ஸ்) ஒன்று தவறிவிட்டது. அதனுள் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், ரக்ஸ், இன்சூரன்ஸ், ATM Card போன்றன உள்ளன. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 844 9880**

## வீடு வாடகைக்கு

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் K.K.S வீதியிலிருந்து 50 m இல் 2 வரவேற்புக் கூடம், 5 அறைகள், 2 சமையறைகள், 2 குளியறைகள், வாகன தரிப்பிட வசதியுடனான வீடு அலுவலகத்திற்கு / நிறுவனத்திற்கு / சிறிய குடும்பமொன்றிற்கு வாடகைக்கு உள்ளது.

**077 659 5559, 077 680 1679**

## அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 07.03.2021 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### திருமதி குமாரசிங்கம் நாகேஸ்வரி

அவர்களின்அந்தியேட்டிக் கிரியைகள் 04.04.2021 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 06.04.2021 செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

**ஆஸ்பத்திரி ஒழுங்கை,**
**மானிப்பாய்.**

**குடும்பத்தினர்.**

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**கடந்த 20.02.2021 அன்று**
**சிவபதமடைந்த**
**எமது அன்புச் செல்வம்**

**அமரர்**

### சுந்தரலிங்கம் பபிக்காந்

*பூமியிலே புகலிடமாய் மலர்ந்தாய்*
*சிரித்த முகத்துடன் திட்டங்கள் வகுத்து*
*திடமாக வாழ்வதற்கு முன்*
*திசைமாறிப் போனது ஐயா உன்கதை*
*45ஆம் நாள் ஆனாலும்*
*மாறாது ஐயா உன் நினைவு.*


அன்னாரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் இன்று (05.04.2021) திங்கட்கிழமை காலை 3.00 மணியளவில் கற்கோவளம் கும்பி முருகன் ஆலய வளாகத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**சிவரூபன் மோகனா**

**கற்கோவளம், பருத்தித்துறை.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**24 . 04 . 1938**



**மறைவு**
**04 . 04 . 2021**

### குணரத்தினம் நவமணியம்மா

மாதகல் துறைமுகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் நவமணியம்மா நேற்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் விக்கினராசா (அமரர்), விஜயராணி, விஜயதேவன் (இந்தியா), விஜயபாலன் (லண்டன்), ஜெயராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகலட்சுமி (இந்தியா), சிவலிங்கம், றாஜி (லண்டன்), இரத்தினசிங்கம் ஆகியோரின் மாமியாரும், இந்தியாவை வசிப்பிடமாகக் கொண்டவர்களான விக்கினேஸ், நாளனி, மாலா மற்றும் ரமேஷ்-கலைமகள் (பிரான்ஸ்), ரஜினா-ஜெயரூபன், றயூலா-தயாபரன் (நோர்வே), சாமந்தி (இலண்டன்), தமயந்தி (இலண்டன்), யதுசா, தாரணிகா ஆகியோரின் பேர்த்தியும், டர்சிகா, நிலவன், டதுசியா (இந்தியா), பிரணவி, ஆரபி (பிரான்ஸ்), ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2021) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று மாதகல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி இராமச்சந்திரன் நாகபூஷணி

பிரம்படி ஒழுங்கை கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமச்சந்திரன் நாகபூஷணி (03.04.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (சிறாப்பர்) முத்துப்பிள்ளை ஆகியோரின் புதல்வியும்,காலஞ்சென்றவர்களான நெடுந்தீவைச் சேர்ந்த சு.நாகேந்திரர் (கொடிவேலி விதானையார்) செல்லம்மா (கிராமசபைத் தலைவி, நெடுந்தீவு) ஆகியோரின் மருமகளும், இராமச்சந்திரனின் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர், நெடுந்தீவு) அன்பு மனைவியும், நாகநாதனின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அமிர்தரட்ணராஜா, செல்வரட்ணம் மற்றும் பாலசிங்கம், நவயோகம், இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, இலட்சுமணராசா, பவளக்கொடி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 05.04.2021 காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**80/7, பிரம்படி லேன்,**
**கொக்குவில் கிழக்கு.**
**நா.இராமச்சந்திரன் - 077 8950209**
**வே.நாகநாதன் - 076 3581627**
**கு.மதன்ராஜ் - 071 2400001**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
01
07
1947



மறைவு
03
04
2021

## தம்பிராசா அரியநாயகம் (அரியம்)

(தச்சு ஆசாரியார்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா அரிய நாயகம் (அரியம்) தச்சு ஆசாரியார் 03.04.2021 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா எலிசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், குருசுமுத்து அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மேரித்திரேசா (பேபி)வின் அன்புக் கணவரும், பொன்சன் (கொலண்ட்), யேன்சன் (விடத்தல் தீவு), பொன்சி (நாவாந்துறை டன்சன் (பிரான்ஸ்) பிறின்சி, டிக்சன், பீற்றர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயா (கொலண்ட்), நந்தினி (லண்டன்), மாலா (விடத்தல் தீவு), ஜெரோம் (சவுதி), பாலினா (இந்தியா), வலன் (கட்டார்), கொண்சியா (மல்லாகம்), ஆசா ஆகியோரின் மாமனாரும், நேசசீவியம், செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரனும் யேசுநாயகம், அமலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சின்னையாவும், பொன்சியா, ஜனனியா, லக்சியா, பொனிஸ்ரன், பொனிஸ்ரெலா, வெனிஸ்ரன், ஜென்சியா, பொனிபன், டெனிஸ்ரன், ஜெனிஸ்ரன், கபில், வலன்சியா, வலன்சன், பிறின்சியா,அருண்சியா, டிக்சியா, ஆகாஷ், அபிஷாந், பேனினா, பேண்சன், பேக்மன், பேண்சியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆன்சியாவின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (05.04.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

நாவாந்துறை
076 919 6133

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
10
03
1946



மறைவு
04
04
2021

## திரு.கந்தையா தர்மரட்ணம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் நவாலி, ஜேர்மனி (Bottrop), லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மரட்ணம் நேற்று (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - காமாட்சி தம்பதியரின் அன்பு மகனும், நாகலிங்கம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலரின் (அருந்தவம்) அன்புக் கணவரும், தர்மினி (லண்டன்), தனலஷ்மி (லண்டன்), தட்ஷாயினி (ஜேர்மனி), துஷ்யந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், டிவாகர் (லண்டன்), சுதாகரன் (லண்டன்), செல்வா (ஜேர்மனி) சுகன்யா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புச் சகோதரும், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற வாகீஸ்வரன், சிவயோகம், பத்மாசினியின் அன்பு மைத்துனரும், டிவஜன் (லண்டன்), வைஷ்ணவி (லண்டன்), ஷாங்கிரி (லண்டன்), வாமசரண் (லண்டன்), தனுஜன் (லண்டன்), ஹருண் (ஜேர்மனி), மீரா (ஜேர்மனி), தனீஷா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.110 சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்.
(0044 7947 342731 - லண்டன்)

தகவல்:
தெ.நிஷாகரன் (சுதன்)

# மரண அறிவித்தல்

தோற்றம்
28
09
1940



மறைவு
01
04
2021

திருமதி

## பாலசிங்கம் சின்னம்மா (காமாட்சி)

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் அச்சுக்கூட ஒழுங்கை கொக்குவில் மற்றும் குளப்பிட்டி வீதி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் சின்னம்மா (காமாட்சி) 01.04.2021 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெனகாம்பிகை, ஜெகதீஸ்வரன் மற்றும் ஜெயானந்தி, ஜெயகுமார் (ஜேர்மனி), ஜெயபாலன் (அமெரிக்கா), ஜெயதாசன், ஜெயபிரதா ஆகியோரின் அன்புத் தாயும், உதயபாலி (ஜேர்மனி), உஷா (ஜேர்மனி), ஷண்முகப்பிரியா (அமெரிக்கா), செல்வாஜினி, சிறி அமலன் ஆகியோரின் அன்பு மாமியும், பிரதீப் (ஜேர்மனி), அனுஷியன் (ஜேர்மனி), சுதர்சன், சுலக்ஷன், சுஜீதன், சுதர்ஷினி, செயந்துர்யன், துலக்ஷிகா, கீர்திகா, ஜெனுஷன் (அமெரிக்கா), ஜெய்ஷா (அமெரிக்கா), அபிநயா, ஹரிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திலக்ஷன், நிர்த்திகா, றியன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.04.2021 வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குளப்பிட்டி வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
28
09
1946



மறைவு
04
04
2021

## மெல்வின் ஜோன் ரெஜினோல்ட் ஞானப்பிரகாசம்

(நில அளவையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 24/2 அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.மெல்வின் ஜோன் ரெஜினோல்ட் ஞானப்பிரகாசம் (நில அளவையாளர்) 04.04.2021 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கிறஸ்டோப்பர் வில்லி ஞானப்பிரகாசம் அவர்களின் அன்பு மகனும் திருமதி ஸ்ரெல்லா ஞானப்பிரகாசம் அவர்களின் அன்பு கணவரும் திரு. வசந்தக்குமார், வைத்தியர் சுரேந்திரக்குமார், திரு.நவீந்திரகுமார், திருமதி துவாரகா அக்னஸ் அவர்களின் தகப்பனாரும், திருமதி வ. சிவமணி, வைத்தியர் சு. தர்சினி, திருமதி ந.கஸ்தூரி, திரு.ப நேசவர்மன் ஆகியோரின் மாமனாரும், நொறிலோன், கரீன் லாவண்யா, உமேஷ் வருண், ஷேறா வைஷாலி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (05.04.2021) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் நல்லடக்க வழிபாட்டின் பின்னர் யாழ் மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

021 222 9542


தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**தந்தையே!
ஆயன் இல்லாத மந்தைகளாக
நாம் தனித்து விட்டாலும்
நீங்கள் ஏற்றி வைத்த கலைத் தீபத்தை
அணையவிடாது கொண்டு செல்வோம்
அமைதியாக இளைப்பாறுங்கள்
கண்ணீருடன் விடைதருகின்றோம்
விண்ணிலிருந்து வழிகாட்டுங்கள்.**





'கலைத்தூது' அருட்கலாநிதி

## நீ. மரிய சேவியர் அடிகள்

(ஸ்தாபகர், இயக்குநர் - திருமறைக் கலாமன்றம்)

மலர்வு: 03.12.1939 உதிர்வு: 01.04.2021

கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக கலை இலக்கியத்துறையில்
தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்து அமரத்துவம் அடைந்த
எமது இயக்குநர் தந்தையின் புகழுடல் இன்று காலை 10.00 மணி முதல்
யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.
இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாளை
6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு
யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமாகும்.
தொடர்ந்து 9.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர்
மேதகு யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை
தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
அதன் பின்னர் தந்தையின் புகழுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா
சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இத்தகவல்களை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாபய....

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் பெருநாள் அன்று தற்கொலைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான கொழும்பு, கொச்சிக்கடை தேவாலயத்தில் நேற்றைய ஈஸ்டர் நாள் ஸ்ரீதேவ ஆராதனைகளின் பின்னர், தேவாலய வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி (மைத்திரிபால சிறிசேன) தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. ஆடை அணிந்தவாறா அவர் இவ்வாறான அறிவிப்பை விடுக்கின்றார்? பேரவலமொன்று இடம்பெறவுள்ளது என்று தெரிந்தும், தமது கடமையை, பொறுப்பை மறந்து வெளி நாடு சென்ற அவர், எப்படி தேர்தலில் போட்டியிட முடியும், எப்படி கட்சி தலைமைப் பதவியை வகிக்க முடியும்?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் அவர் (மைத்திரிபால சிறிசேன) குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். எனவே, அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இனியும் தாமதம் வேண்டாம்.

பொறுப்புக்கூற வேண்டிய அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முன்னேற்றம் இல்லாவிட்டால் வீதியில் இறங்குவோம். எம்மை ஏமாற்றமுடியாது. ஏமாறவும் மாட்டோம். ஒன்றரை வருடங்கள் விசாரணையின் பின்னர் ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்படுவது ஏன்?. இதனை அனுமதிக்க முடியாது-என்றார். (ஓ,44)

## யாழ்.வலய....

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் அதிகளவு கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு கடந்த 29ஆம் திகதி முதல் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய இந்த விடுமுறை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகள் எதிர்வரும் 19ஆம் திகதி இரண்டாம் தவணை ஆரம்பத்திலேயே திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அதிபர்...

ருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதிபருக்கும், ஆசிரியருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து இராமநாதன் கல்லூரி நேற்றிரவு முதல் சுகாதாரப் பிரிவினரால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோரை இனங்காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவித்த சுகாதாரப் பிரிவினர், அங்கு தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர். (எ-26)

## தொல்பொருள்களைக்...

கிராமத்துடன் உரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்காக வவுனியா மாவட்டத்தின் போகஸ்வெவ கிராமத்துக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வந்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'மொபிட்டெல்' நிறுவனம் போகஸ்வெவ மகா வித்தியாலயத்துக்கும் நெடுங்கேணி மகா வித்தியாலயத்துக்கும் அன்பளிப்பாக வழங்கிய 2 மடிக்கணினிகள் மற்றும் 'டயலொக்' நிறுவனம் அன்பளிப்பாக வழங்கிய தொலைக்காட்சி மற்றும் இணைப்பு ஆகியவற்றை ஜனாதிபதி இந்த நிகழ்வில் வைத்து அதிகாரிகளிடம் கையளித்தார்.

'அறிவுப் பலம் கொண்ட சிறுவர் தலைமுறை' என்ற தலைப்பில் ஜனாதிபதி பாடசாலைகளுக்கு புத்தகங்களை வழங்கினார். ஒரு பாடசாலைக்கு பல்வேறு பாடத் துறைகளில் 500 புத்தகங்கள் வழங்கப்பட்டன.

உரிமை இன்றி இதுவரை அரச காணிகளை பயன்படுத்தி வந்த குடும்பங்களுக்கு காணி உரிமைப் பத்திரங்களை வழங்கும் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான 5 குடும்பங்களுக்கு உரிமைப் பத்திரங்களையும் ஜனாதிபதி வழங்கி வைத்தார்.

அத்துடன் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பாடநெறிகளை பயில்வதற்காக ஜனாதிபதியால் 3 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

போகஸ்வெவ மற்றும் சுற்றியுள்ள கிராமங்களின் 37 கிலோமீற்றர் வீதி மற்றும் பிரதேசத்தின் இரண்டு முக்கிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் பணி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள கிராமங்களை பாதுகாப்பதற்காக மின்சார வேலிகளை அமைக்கவும் தீர்மானிக்கப் பட்டது. போகஸ்வெவ ஆரம்ப சுகாதார மத்திய நிலையத்தை தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டியதன் தேவையும் வலியுறுத்தப்பட்டது.

பிரதேச வைத்தியசாலைகளில் நிலவும் மருத்துவர், தாதியர் மற்றும் ஏனைய ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். நீண்டகாலமாக இருந்துவரும் காணி உரிமைகள் பற்றிய பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்து, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு கிராமவாசிகளுக்கு வசதிகளை செய்து கொடுப்பது பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது- என்றுள்ளது. (ஓ)

## மாவட்ட.....

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம், யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் நேற்று 868 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 15 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 6 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறையில் 3 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் பணியாளர், இருவர் ஏற்கனவே தொற்றுடன் உறுதி செய்யப்பட்டுள்ளவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நோயாளி ஒருவர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளார். உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இருவரே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள்.

வவுனியா மாவட்டத்தில் ஒருவர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளார். வவுனியா பொது மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வந்த ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-26)

## இந்தியாவுக்கு...

இராமேஸ்வரம் கடற்கரையில் இலங்கையைச் சேர்ந்த இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தனுஷ்கோடி, அரிச்சல்முனை கடற்கரைக்கு பைபர் படகில் இருவர் வந்துள்ளனர் என்று கிடைத்த தகவலுக்கு அமைய இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகள் அவர்களைக் கைதுசெய்தனர். அவர்கள் இராமேஸ்வரம் கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் தாங்கள் மன்னார், அடம்பனைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணையில் தெரிவித்துள்ளனர். அதையடுத்து மன்னாரைச் சேர்ந்த இருவர் இராமேஸ்வரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல் பரவியிருந்தது.

எனினும் அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம், புத்தூரைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வாதரவத்தை, வீரவாணி பகுதியில் கடந்த மாதம் 28ஆம் திகதி அதிகாலை து.சந்திரகோபால் என்பவர் கொலை செய்யப்பட்டிருந்த, சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சிறிவிஜயராசா நாகேஸ்வரன் (வயது-20), யோகநாதன் பிரதாபன் (வயது-27) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று இராமேஸ்வரம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)

## கொரோனா...

பெண் ஒருவரும், மொறொன்தொடவை சேர்ந்த 61 வயது ஆண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர். நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 581 ஆக உயர்ந்துள்ளது. (எ-இ)

## வவுனியாவில்...

னாத் தொற்றால் உயிரிழந்தார். அவருடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த முடிவுகள் நேற்றிரவு வெளியான நிலையில், 7 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-18)

## காணி....

எதிர்ப்புத் தெரிவித்துப் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி, மிருசுவிலில் உள்ள தனியாருக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணியை இராணுவத்தின் தேவைக்காகக் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான காணி அளவீட்டு நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் காணியைச் சுவீகரிக்கும் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 9 மணியளவில் மிருசுவில் ஏ-9 வீதியில் உள்ள ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டப் பொது அமைப்புக்களின் இணைப்பாளர் க.குணாளன் அறிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் இன்று காலை அங்கு கூடி காணி அளவீட்டு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வடமராட்சி...

இவர் நண்பர்களுடன் படகில் சென்ற போது தவறிக் கடலில் வீழ்ந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

கடலில் மூழ்கிய இவர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

உடல் மந்திகை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர், உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-26)

## ஆயரின்....

ஊர்வலமாக மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் அருட்தந்தையர்கள், பாடசாலை மாணவர்கள், மக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

பேராலயத்தில் பூதவுடல் இன்று மதியம் இரண்டு மணிவரை அஞ்சலிக்கு வைக்கப்படும்.

மாலை மூன்று மணியளவில் இலங்கையில் உள்ள மறை மாவட்ட ஆயர்களின் இரங்கல் திருப்பலியுடன் ஆலயத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு ஆயரின் மறைவுக்குத் துக்கம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

ஆயரின் மறைவையிட்டு இன்று திங்கட்கிழமை தமிழ்த் தேசிய துக்க நாள் கடைப்பிடிக்க வேண்டும் என்று சிவில் அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடும் பாதுகாப்பு மத்தியில் ஈஸ்டர் பெருநாள் வழிபாடு

**கொழும்பு, ஏப். 5**

**இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பை நினைவு கூரும் உயிர்த்த ஞாயிறு தினத்தை (ஈஸ்டர்) உலகம் முழுவதும் கிறிஸ்தவர்கள் நேற்றுக் கொண்டாடினர்.**



இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறு தினத் திருப்பலி பூசைகள் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளுடனேயே நடைபெற்றன.

கடந்த 2019ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்களையும், நட்சத்திரக் ஹொட்டல்களையும் இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. இதனை கருத்தில் கொண்டு இவ்வாண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை இரவு முதல் பொலிஸாரும் முப் படையினரும் இணைந்து கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட பாதுகாப்பை வழங்கி வந்தனர்.

மேல் மாகாணத்தின் பிரதான வீதிகளிலும் நட்சத்திரக் ஹொட்டல் களிலும் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் கடந்த 2019ஆம் ஆண்டு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்த கொழும்பு கொச்சிக்கடை தேவாலயம், நீர்கொழும்பு தேவாலயம் மற்றும் மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் என்பவற்றில் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தத் தேவாலயங்களில் சோதனைகளின் பின்னரே மக்கள் அனுமதிக்கப் பட்டனர்.

**வடக்கு, கிழக்கில்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தேவாலயங்களில் பலத்த பாதுகாப்புகளுடன் உயிர்த்த ஞாயிறு தினத் திருப்பலி பூசைகள் இடம்பெற்றன. ஒவ்வொரு தேவாலயங்களுக்கும் ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

**மலையகத்தில்**

இதேவேளை, மலையகத்திலுள்ள தேவாலயங்களிலும் உயிர்த்த ஞாயிறு தின நிகழ்வுகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றன.(ஓ.22,18,6,70)





இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி நேற்று வட்டுக்கோட்டை சவாரித்திடலில் ஆரம்பமாகி நடைபெற்றது. பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 5 பிரிவுகளைக் கொண்ட அந்தப் போட்டியில் மொத்தமாக 99 சோடிக் காளைகள் பங்குபற்றியிருந்தன. (ப319)

### ஈஸ்டர் பெருநாளன்று வெடிபொருள்களுடன் நான்கு பேர் கைது!!

ஈஸ்டர் பெருநாளான நேற்றைய தினம் பெருமளவு வெடிபொருள்கள் மற்றும் அவற்றுக்கான மூலப் பொருள்களுடன் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலநறுவை மாவட்டத்தின் பகமுண பிரதேசத்திலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சென்ற முச்சக்கரவண்டியிலிருந்து 20 கிராம் வெடி மருந்து, 3.23 கிலோ அமோனியா, டெட்டனேட்டர்கள் 14 மற்றும் வோடர் ஜெல் குச்சிகள் 135 என்பவை உட்பட வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் பெருநாளன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இதனையொட்டி நேற்றைய ஈஸ்டர் பெருநாளுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ.-இ)

### மோப்ப நாய்களுக்கான வைத்தியசாலை திறப்பு

வெடி பொருள்களை கண்டறியும் இராணுவத்தைச் சேர்ந்த மோப்ப நாய்களுக்கான மிருக வைத்தியசாலை திறக்கப்பட்டது. களப் பொறியியல் படையணியின் கே9 பிரிவில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த வைத்தியசாலையை அதன் பிரதம பொறியியலாளர் மேஜர் ஜெனரல் நிஹால் அமரசேகர திறந்து வைத்தார். அறுவைச் சிகிச்சை வசதி, தயார்படுத்தல் பிரிவு, மீட்டல் பிரிவு மற்றும் விடுதி என்பவற்றை கொண்ட இந்த வைத்தியசாலையில் அல்ட்ரா சௌண்ட் ஸ்கேனிங், எலக்ட்ரோ கார்டியோகிராஃப் யூனிட் மற்றும் டிஜிட்டல் ரேடியோ வரைபட வாசிப்பு என்பவற்றை மேற்கொள்ளும் வசதிகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-319)

### உச்சத்தை தொடும் வெப்பம்!

கொழும்பு, ஏப். 5

வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் வடமத்திய மாகாணங்களிலும் வெப்பநிலை உயர்வாகக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. இந்தப் பிரதேசங்களில் 'தீவிர எச்சரிக்கை' நிலையை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ளது.

அவசியமற்ற பயணங்களை தவிர்க்குமாறும், அதிகளவான குடிதண்ணீரைப் பருகுமாறும், வெளிர் நிறத்தி லான மெல்லிய ஆடைகளை அணியுமாறும் வளிமண்டலவியல் திணைக் களம் அறிவுறுத்தியுள்ளது. (ஒ.இ)

**IELTS New Batch**
தனிப்பட்டதும், குழு வகுப்புக்கள்
ஆரம்பம் Cont - 077 798 9830
53, சிவகுருநாதர் வீதி, Brown Rd.

**கொள்வனவு**
தாழம்பூ, பூமாதுளம்பூ, செங்கழுநீர், விஷ்னுகிராந்தி, நல்ல விலைக்கு எடுக்கப்படும்.
☎ 077 457 8852

**PHYSICS A/L 2023**
புதிய பிரிவு ஆரம்பம் (பிரிவு 2)
06.04.2021 செவ்.4.30 PM
(சனி. ஞாயி. செவ். வியா-4.30-5.30 PM)
ஆசிரியர்:திரு.M.ஸ்பெல்மன் (Bsc,PGDE)
இடம்: HAC, சித்தன்கேணி
தொடர்பு: 0776116724, 0774588183

**Workers தேவையா!**
உங்கள் நிறுவனங்களுக்கு தேவையான அலுவலர்களை (Data Entry Operator, Clerk, Office Staffs, Cashier, Driver.....) எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
dewmasweb.com 074 138 3368

**Vacancy**
Graphics Designer, Cashier, Sales man, Sales Girl, Accounts (Clerk), Waiter, Sales Rep, Field Officer, Office Assistant, Helper, Financial Advisor, Financial Team Leader.
dewmasweb.com 074 138 3368

**பணியாளர்கள் தேவை**
சாவகச்சேரிப்பகுதியில் இயங்கும் மிக்சர் கம்பனிக்கு பின்வரும் பதவிநிலைக்குப் பணியாளர்கள் தேவை.
I.விற்பனைப் பிரதிநிதி (ஆட்டோ ஓடக்கூடியவர்)
II.(பைக்கற்) பொதிசெய்பவர்
தொடர்பு: 076 155 5536

**PHYSICS A/L 2023 (Jaffna Town)**
ஆரம்பம்: 07.04.2021 புதன்-5.00 PM
ஆசிரியர்: திரு.M.ஸ்பெல்மன் (Bsc, PGDE)
இடம்: 10/10, மத்தியூஸ் வீதி.
யாழ்ப்பாணம்.(பெரியகோயில் அருகாமை)
தொடர்புகளுக்கு: 077 611 6724
➤Personal Class, Group Class ஆக எடுக்க விரும்பிய மாணவர்கள் T.P இல் தொடர்பு கொள்ளவும்
➤A/L - 2021-Paper Class
A/L -2022- அலகுகளும் அதிர்வுகளும் நடைபெறுகின்றன.

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் உரும்பிராய் கோப்பாய் வீதியில், மெயின் றோட்டுடன் 12 பரப்புக் காணிவிற்பனைக்குண்டு. 1½ பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை. (கோப்பாய் வீதி. கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமை)
தொடர்பு :
077 288 0152, 077 623 4204, 077 235 2656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05. 04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.